பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை 27.09.2022 கதிர் 213

## காட்டு யானை தாக்கி இருவர் பரிதாபச் சாவு

காட்டு யானை தாக்கியதில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் மாவட்டம், எப்பாவல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

எப்பாவல பிரதேசத்தின் கெலேகம ☞2

# முன்வைத்த காலை பின்வைக்கவே மாட்டேன்; நெருக்கடி நிலைக்குத் தீர்வு கண்டே தீருவேன்!

### எதிரணியிடம் ஆட்சியை ஒப்படைத்தால் நாடு பேரழிவைத்தான் சந்திக்கும் என்கிறார் ரணில்



எனக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் எதிர்வரும் நாட்களில் பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க எதிரணியினரும் அவர்களின் ஆதரவாளர்களும்திட்டமிட்டுள்ளனர்என்றுதகவல்கிடைத்துள்ளது. இதனைநாம்எதிர்கொள்ளும்வகையில்வியூகங்களை வகுக்க வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜப்பானுக்குச் செல்ல முன்னர் ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய விசேட கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிரணியினர் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தால் அதனை நாம் பரிசீலிக்க முடியும். ☞2

# வடக்கு – கிழக்கு எழுச்சிக்கோலம்; அரச படைகள் கைகட்டி வேடிக்கை



### திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் ரணிலைச் சாடுகிறார் சரத் வீரசேகர எம்.பி.

பயங்கரவாதியான திலீபனை நினைவேந்தி வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிகழ்வுகளைப் பகிரங்கமாகப் பெருமெடுப்பில் நடத்துகின்றனர். ஆனால், அதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அரசும், படையினரும், பொலிஸாரும் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். ☞2

## இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ரணிலிடம் ஜப்பான் ஆதரவு தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷியை இன்று காலை ☞2

## கஜேந்திரகுமார் அணியினரே குழப்பங்கள் விளைவித்தனர்

### பார்த்தீபன் தன்னிலை விளக்கம்



தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நாம் அமைதியாகவே இருந்தோம். ஆனால், கஜேந்திரகுமார் அணியினர் தாங்களாகவே தமக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய ஒரு ☞2

## அரசின் சதிகளைத் தாண்டி நினைவு கூரப்பட்ட திலீபன்

### இப்படி அறிக்கை வெளியிட்டுள்ளார் குழப்பியடித்த முன்னணியின் சுகாஷ்

அரச புலனாய்வாளர்களால் இயக்கப்படுபவர்களின் சதிகளைத் தாண்டித் தியாக தீபம் திலீபன் நினைவுகூரப்பட்டார்.

- இவ்வாறு யாழ். நல்லூரில் தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பியடித்த தமிழ்த் தேசிய மக்கள் ☞2

# தியாகி திலீபன் நினைவாலயம்: புலன் விசாரணைகள் ஆரம்பம்

### பழைய கோப்புக்களைக் கிளறுகின்றது அமைச்சு




யாழ். நல்லூர் பின்வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு நல்லாட்சி அரசின் காலத்தில் பாதுகாப்பு வேலி, அரச நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டமை தொடர்பில் 4 ஆண்டுகளின் பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் இந்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. நல்லாட்சி அரசின் காலத்தில் ☞2

## நடுக்கடலில் இறக்கிவிடப்பட்ட இலங்கை அகதிகள்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 6 பேர் அகதிகளாகத் தமிழகத்துக்குச் சென்ற நிலையில் இந்தியா எனத் தெரிவித்து நடுக்கடலில் இறக்கி விடப்பட்டனர்.

மன்னாரில் இருந்து படகு வழியாகத்தப்பிச்சென்றவர்கள் இந்தியாவின் ☞2

## இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுக்கு சிங்கப்பூர் பிரதமருக்கு ரணில் அழைப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை இன்று டோக்கியோவில் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தொடர்பில், இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில், சிங்கப்பூர் பிரதமரிடம் ☞2

## கஜேந்திரகுமார்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புனிதமான இடத்தில் குழப்பங்களை ஏற்படுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்து வலிந்து எங்களைப் பிரச்சினைகளுக்குள் இழுத்து குழப்பங்கள் உருவாக காரணமாக இருந்தார்கள்.

- இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தன்னிலை விளக்கமளித்துள்ளார்.

திலீபன்நினைவிடத்தில்நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

திலீபன் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதத்தின் முடிவில் மாலை நேர நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. நினைவேந்தல் முடிவில் வீடு செல்ல ஆயத்தமாக நின்றிருந்தோம். அப்போது யாழ். பல்கலைக்கழக பணியாளர் வீரா அருகில் நின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திர குமார் அணியின் உறுப்பினர்கள் சிலர் வீரா மீது தூரோகி, ஒட்டுக்குழு போன்ற வார்த்தைகளைக் கொண்டு வசை பாடினார்கள்.

ஒரு வார்த்தைகூட பேசமால் பொறுமையாக இருந்த வீரா அங்கிருந்து விலகிச் சென்று தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வீடு செல்ல முற்பட்ட போது அவர்கள் ஒட்டுக்குழு, ஈ.பி.டி.பி என்று மீண்டும் அவரைப் பார்த்து கத்தினார்கள்.

பின்னர் அவ்விடத்தில் நின்ற என்னையும் சி.தனுஜனையும் ஒட்டுக் குழுக்கள், துரோகிகள் என்று உரக்க வசைபாடினார்கள்.

என்ன என்று நான் அவர்களிடம் கேட்ட போது அவர்கள், நீங்கள் இந்த இடத்தில் நிற்பதற்குத் தகுதியற்றவர்கள். நீங்கள் ஒட்டுக்குழுக்கள். இதை விட்டு வெளியேறுங்கள் என்று மிரட்டினார்கள்.

அப்போது நான் இந்த இடத்தை விட்டு எங்களைப் போகச் சொல்லுவதற்கு நீங்கள் யார்? என்று வினாவினேன். அதற்கு என் மீதும் தனுஜன் மீதும் தாக்குதல்நடத்தஅவர்கள்முனைந்தனர். ஆனால், அதனை அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் சக உறுப்பினர்கள் தடுத்து விட்டனர்.

இந்நிலையில், எங்களுடன் முரண்பட்டவர்களிடம் கேள்விகளைக் கேட்ட அங்கிருந்த பொதுமக்களுடனும் அவர்கள் முரண்பட்டார்கள். அங்கிருந்த அனைத்து பொதுமக்களும் வலிந்து பிரச்சினைகளை உருவாக்கி குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் நடக்கின்றார்கள் என்று அவர்களைப் பேசினார்கள். நடந்த சம்பவம் இவ்வாறிருக்கையில் ஒரு பத்திரிகையில் வெளியான செய்தியின் பிரகாரம் இரு தரப்பும் அநாகரிகமாக நடந்து கொண்டதாக உள்ளது. ஆனால், உண்மையில் நாங்கள் அந்த இடத்தில் அமைதியாகவே இருந்தோம் - என்றுள்ளது.

## காட்டு யானை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் ரொட்டவெவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

58 மற்றும் 64 வயதான இருவரே இந்தச் சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

## தியாகி திலீபன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சுக்கு ஊடாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் பாதுகாப்பு வேலிக்கான நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு அமைவாக அது அமைக்கப்பட்டது.

தியாகதீபம்திலீபனின்நினைவேந்தல் நிகழ்வுக்கு நல்லாட்சிக் காலத்தில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றனர்.

இதன்போது நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களில், திலீபனின் நினைவுத் தூபி அரச நிதியில் அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மூன்று மாதங்களுக்கு முன்னர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மிகக் காட்டமான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு அரச நிதியை எவ்வாறு ஒதுக்க முடியும்? என்று அதில் கேள்வி எழுப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

## அரசின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

சதிகாரர்களின் முகமூடிகள் கழன்றன. பொய்ச் செய்திகளைப் பரப்புவதில் அரச ஆதரவு ஊடகங்கள் தீவிரம். மக்களுக்கு உண்மையை உரைக்கச் சகல விடயங்களும் ஆதாரங்களும் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும். தமிழ்த்தேசியவரலாறுகடத்தப்படுவதை எவராலும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது - என்று அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டோக்கியோவில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுகளில் முன்னேற்றத்தை ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி வரவேற்றார்.

அத்துடன் இலங்கைக்கான கடன் வழங்குனர்களுடன் நடத்தப்படும் கடன் மறுசீரமைப்பு பேச்சுகளில் ஜப்பான் முன்னணி பங்கை வகிக்கத் தயாராக இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் கடந்த ஆட்சியில் பல முதலீட்டுத் திட்டங்களை இரத்துச் செய்ததைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வருத்தம் தெரிவித்தார். அந்தத் திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் ஜப்பான் முதலீடு செய்ய வேண்டும் என்பதில் இலங்கை அரசு ஆர்வம் காட்டுகின்றது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதில் ஜப்பான் அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும், இதற்கமைய எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை இலங்கையில் மேற்கொள்வது குறித்து ஆராய ஜப்பான் தயாராக இருக்கின்றது எனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி இதன்போது தெரிவித்தார்.

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தேர்ச்சியுற்ற தொழிலாளர் பரீட்சையை 2023 ஜனவரியில் ஜப்பான் ஆரம்பிக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கி வரும் ஒத்துழைப்பைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள், நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்காக மேற்கொள்ளும் பிரசாரத்திற்கு இலங்கை அரசு ஆதரவளிக்கின்றது எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை வரவேற்ற ஜப்பான் வெளிவிவகார அமைச்சர், சர்வதேச அரங்கில் ஆசியாவுக்கு வலுவான பிரதிநிதித்துவம் தேவை எனவும் வலியுறுத்தினார்.

## இலங்கையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளக்கமளித்தார். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை முன்னுரிமை வழங்குகின்றது எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இதனை வரவேற்ற பிரதமர் லீ சியென் லூங், இலங்கையில் முதலீடு செய்ய சிங்கப்பூர் மீண்டும் எதிர்பார்த்திருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கை 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இருக்கும் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்

## நடுக்கடலில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுகையில் உள்ள திடல் எனத் தெரிவித்து தரை இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடம் இந்தியாவின் ஆளுகை கரையோரம் அல்ல எனவும், அது இலங்கை ஆளுகைப் பிரதேசம் எனவும் கண்டு கொள்ளப்பட்டது.

இதையடுத்து இலங்கை கடற்படை சம்பவ இடத்துக்குச் சென்று நடுக்கடலில் நின்ற 4 பேரையும் கைது செய்து வந்து மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## முன்வைத்த..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால், அவர்களின் கோரிக்கைகள் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் உள்ளன.

ஆட்சி மாற்றத்தைக் கோரும் அவர்களிடம் மாற்று வழி எதுவும் இல்லை. நாடாளுமன்றத்தில் ஒரு ஜனாதிபதியையோ அல்லது பிரதமரையோ தெரிவு செய்யும் பலம் எதிரணியிடம் இல்லை.

இவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் நாடு பேரழிவைத்தான் சந்திக்கும்.

தேர்தல்களை அதற்குரிய காலங்களில்தான் நடத்த முடியும். எதிரணியினர் விரும்புவது போல் தேர்தல்களை நடத்த முடியாது.

தற்போதைய நிலைமையில் பல சவால்களை எதிர்கொள்வேன் என்று தெரிந்துகொண்டுதான் ஆரம்பத்தில் பிரதமர் பதவியையும், அதன்பின்னர் ஜனாதிபதி பதவியையும் பொறுப்பேற்றேன்.

முன்வைத்த காலை நான் ஒருபோதும் பின்வைக்க மாட்டேன். நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கண்டே தீருவேன் - என்றார்.

## வடக்கு-கிழக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு சாடியுள்ளார் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிரிழந்தாலும் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மறக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழினத்தின் விடிவுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு நாட்கள் நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு நேற்று தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இம்முறை மக்கள் கூடுதல் அக்கறை காட்டி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை எழுச்சிபூர்வமாக நடத்தினர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்து வெளியிட்ட முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மேலும் கூறுகையில்,

திலீபனின் இந்த நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் கருத்து என்ன?

வடக்கு, கிழக்கில் இம்முறை திலீபனின் நினைவேந்தலைப் பெருமெடுப்பில் நடத்த யார் அனுமதி வழங்கியது? இது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டதா?

பயங்கரவாதிகளின் மோசமான செயல்களால்தான் எமது நாடு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சின்னாபின்னமாகியது.

மீண்டும் அதே நிலைமை ஏற்பட அரசு விரும்புகின்றதா?

எதிர்வரும் காலங்களில் வடக்கு, கிழக்கில் புலிப் பயங்கரவாதிகளை நினைவேந்தும் நிகழ்வுகளுக்கு அரசு தடைவிதிக்க வேண்டும். இது தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி உடனடியாக வெளியிட வேண்டும் - என்றார்.

076 443 5622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலுக்குத் தேவை போதனை

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாம் நாட்டில் இல்லாத சமயத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனை பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமித்திருக்கின்றார். அந்தப் பின்புலத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த சில கருத்துக்கள் பலத்த சட்ட வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுருக்கின்றன.

"எந்தவொரு ஆர்ப்பாட்டம் அல்லது எதிர்ப்பு இயக்கம் நடத்துவதற்கும் ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர் இலங்கைப் பொலிஸாரிடம் அனுமதி பெறப்பட வேண்டும்" – எனச் செய்தியாளர்களிடம் அவர் கூறிய கருத்தே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு எந்த தடையும் இல்லை. போராட்டம் நடத்தும் மக்களின் உரிமையை அரசு ஏற்றுக்கொண்டு மதிக்கிறது. எவ்வாறாயினும், நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு ஏற்ப பொலிஸாரிடம் முன் அனுமதி பெற வேண்டும்.

"நாட்டின் சட்டத்தின்படி, ஓர் எதிர்ப்பு அணிவகுப்பு அல்லது ஆர்ப்பாட்டத்திற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் பாதுகாப்பு நிறுவனத்திடம் இருந்து முன் அனுமதி பெறப்பட வேண்டும். தற்போது நடத்தப்படும் எந்த ஒரு போராட்டமும் அந்த சட்டத்திற்கு உட்பட்டது அல்ல.

"சட்டம், ஒழுங்கைப் பாதித்து, அசௌகரியத்தை ஏற்படுத்தி, பொது நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் சட்டவிரோத ஆர்ப்பாட்டங்கள் அல்லது போராட்டங்கள் அனுமதிக்கப்பட மாட்டா. இது தொடர்பாக அரசாங்கம் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்" – என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

இந்தக் கருத்தைக் காட்டமாக விமர்சித்து இருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

"அடிப்படை உரிமைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சருக்கும் (ஜனாதிபதிக்கும்) பதில் பாதுகாப்பு அமைச்சருக்கும் சரியான – முறையான – போதனை வழங்கப்பட வேண்டும். 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசமைப்புகளின் கீழ் கடந்த 50 ஆண்டுகளில் இந்த சட்டவியல் விவகாரம் உயர் நீதிமன்ற வழக்காறில் பெரு வளர்ச்சி கண்டு, மேன்மை அடைந்துள்ளது. அதனை இவர்கள் இன்னும் அறியாமல் இருக்கின்றார்கள்" –என்று சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

ஒன்று கூடல் சுதந்திரம் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட ஓர் அடிப்படை உரிமையாகும். அப்படி இருக்கையில் பொலிஸ் அனுமதியின்றி அப்படிக் கூடுவது குற்றம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவே முடியாது என 1983இல் விவியன் குணவர்த்தனவின் வழக்கில் உயர் நீதிமன் றத்தில் நீதியரசர் ஜே.எவ். ஏ.ஸோஸா வழங்கிய திட்ட வட்டமான தீர்ப்பை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணிமான சாலிய பீரிஸ் சுட்டி காட்டி இருக்கிறார்.

ஆக, ஜனாதிபதிக்கும் அமைச்சருக்கும் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்டங்கள் போதிக்கப்பட வேண்டித்தான் இருக்கின்றன.

# மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படாது!

## அமைச்சர் காஞ்சன திட்டவட்டம்



நுரைச்சோலை அனல்மின் நிலையம் புனரமைக்கப்படும் வரை தனியார் ஆலைகளில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் –இதன் காரணமாக இன்று முதல் மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் பழுதடைந்தடைந்துள்ளமையால், நாடளாவிய ரீதியில் மின்வெட்டு அமுலாகும் காலம் அதிகரிக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினரின் கல்விக்கருத்தரங்கு மாங்குளத்தில்!

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புலமைக் குழுவும் மாங்குளக்கிளையும் ஒழுங்குபடுத்தும் கல்விக்கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, மாங்குளம் ஏ9 வீதியில், துணுக்காய் வலயக்கல்லூரி அலுவலகத்தில் நடைபெறும்.

நெடுந்தீவு கத்தோலிக்க திரு அவையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் கல்விக்கருத்தரங்கு முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் நடைபெறும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மாங்குளக்கிளையின் ஏற்பாட்டில் கலைஞர்கள், இலக்கிய ஆளுமைகள் சந்திப்பும் கலந்துரையாடலும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் மாங்குளக்கிளையுடன் இணைந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு வவுனியா மாவட்டத்தில் பல்துறை சார் கலைஞர்களையும் சந்திப்பதுடன் அவர்களின் அளிக்கை நிகழ்வுகளும் மாங்குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# வாகனங்களின் விலை குறைவடைந்துள்ளது!

சந்தையில் வாகனங்களின் விலைகள் வேகமாக குறைவடைந்து வருவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வட்டி வீதம் அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் உதிரி பாகங்களின் தட்டுப்பாடு போன்ற ஏனைய பிரச்சினைகளால் வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக என அதன் தலைவர் இந்திக்க சம்பத் மெரஞ்சிகே தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் விலைகள் குறைந்துள்ள போதிலும், உதிரி பாகங்கள் மற்றும் வாகன பராமரிப்பு கட்டணங்கள் அதிகளவில் அதிகரித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிலுக்காகச் சுற்றுலா விசாவில் பெண்ணொருவரை டுபாய் அனுப்பிய முகவர் நிறுவன உரிமையாளர் கைது!

சுற்றுலா விசா ஊடாக தம்புள்ளை பெண்ணை டுபாய் நாட்டுக்கு தொழிலுக்கு அனுப்பிய வெளிநாட்டு முகவர் நிறுவன உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சுற்றுலா விசா ஊடாக டுபாய் நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண் சேவைக்கு அனுப்பிய பெண்கள் 85பேரை டுபாயில் துன்புறுத்தும் அறை ஒன்றில் அடைத்து வைத்திருப்பதாக ஊடகங்களில் பிரசாரமான செய்தி தொடர்பாக உடனடியாக நட வடிக்கை எடுப்பதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன் பிரகாரம் பணியகத்தின் விசாரணைப்பிரிவு குழுவொன்று தம்புள்ளை பிரதேசத்துக்கு சென்று, றித்த முகவர் நிறுவன உரிமையாளர் மற்றும் டுபாயில் சித்திரவதைக்கு ஆளாகிய நிலையில் நாட்டுக்குவந்து, இந்தத்தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கிய பெண் ஆகியோரை, தபுள்ளையில் அமைந்திருக்கும் பணியகத்தின் பயிற்சி நிலையத்துக்கு அழைத்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அதன் பின்னர் குறித்த வெளிநாட்டு முகவர் நிறுவன உரிமையாளரை கைதுசெய்து தபுள்ளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, நீதிவான் மேற்படி நபரை அடுத்த மாதம் 3ஆம் திகதிவரை சிறைப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இருந்தபோதும் இந்த சம்பவத்துக்கு காரணமான குறித்த பெண் 2022.05.23ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளிநாட்டுக்கு செல்லும்போது, தொழிலுக்காக வெளிநாடு செல்வதில்லை என விமான நிலைய பணியக பிரிவுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது வெளிநாட்டு சுற்றுலாவுக்கான செலவுகளை அவரின் சகோதரர் மற்றும் சகோதரி ஏற்றுக்கொள்வதாகவும் 2022. 06.07 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு குறித்த பெண் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விமான நிலைய பிரிவு அதிகாரிகளுக்கு உண்மை தகவல்களை மறைத்து வெளிநாட்டுக்கு சென்றுள்ளதுடன் சட்ட விராதேமான முறையில் தொழிலுக்காக வெளிநாட்டுக்கு சென்றுள்ளதன் மூலம் பணியகத்தின் சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளார். எனவே குறித்த பெண் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 27.09.2022

# ரஷ்யப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு குழந்தைகள் உட்பட 17பேர் உயிரிழப்பு







மாஸ்கோ, செப்.27

ரஷ்யாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள உத்முர்டியா மாகாணத்தில் உள்ள இஜவ்ஸ்க் நகரில் உள்ள பாடசாலையில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 குழந்தைகள் உள்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர்.மேலும் 20க்கும் அதிகமானோர் காயமடைந்தமையுடன், துப்பாக்கிச் சூட்டை நடத்திய மர்ம நபர் தன்னைத் தானே சுட்டும் தற்கொலை செய்து கொண்டார்.

ரஷ்யாவின் மத்திய பகுதியில் உள்ள இசேவ்ஸ்க் நகரில் இருக்கும் ஒரு பாடசாலைக்கு, மர்ம நபர் ஒருவர் நேற்றுக் காலை வந்த ஒருவர். உள்ளே நுழைந்து திடீரென மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து, மாணவர்களை நோக்கி சரமாரியாக சுடத் துவங்கினார். குண்டு பாய்ந்த பல மாணவர்கள் காயமடைந்தத விழுந்தனர். மற்றவர்கள் அங்கிருந்து தப்பித்து ஓடியுள்ளனர்.

பின்னர், அந்த நபர் தன்னைத் தானே சுட்டு உயிரிழந்தார். துப்பாக்கி சூடு நடத்திய மர்ம நபர் நாஜிப்படை இலச்சினை கொண்ட தொப்பியை அணிருந்திருந்தார் என சம்பவ இடத்தில் இருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

தகவல் அறிந்து வந்த பொலிஸார் காயம் அடைந்து கிடந்த 21 பேரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் ஏழு மாணவர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குழந்தைகள் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு நடந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ரஷிய அதிபர் புடின் கண்டனம் தெரிவித்துள்ளார். பாடசாலையில் நடத்தப்பட்ட தாக்குதல் மனிதாபிமானமற்ற பயங்கரவாத தாக்குதல் என அவர் தெரிவித்துள்ளார்.

## அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் விளைவாக ரஷ்யா பேரழிவை சந்திக்கும்

### அமெரிக்கா எச்சரிக்கை



கீவ், செப்.27

உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் ரஷ்யா பேரழிவை சந்திக்கும் என அமெரிக்கா கடுமையாக எச்சரித்துள்ளது.

உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்து வைத்துள்ள பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பது குறித்த பொதுவாக்கெடுப்பு நிறைவு பெற்றதும் ரஷ்யப் படைகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில்அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜேக் சல்லிவன் இதுபற்றி தெரிவிக்கையில், போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் என்ற மறைமுகமான அச்சுறுத்தல்களுக்கு ரஷ்யா அதிக விலை கொடுக்க நேரிடும். ரஷ்யா இந்தக் கோட்டைத் தாண்டினால் ரஷ்யாவுக்கு பேரழிவு விளைவுகள் ஏற்படும். அமெரிக்கா தீர்க்கமாகப் பதிலளிக்கும். இந்த நடவடிக்கையை எடுப்பதில் இருந்து ரஷ்யாவைத் தடுக்கத் தேவையானதை நாங்கள் செய்வோம் என கூறினார்.

இதனிடையே அமெரிக்கா இந்த எச்சரிக்கையை வெளியிட்ட சில மணி நேரத்தில் உக்ரைனின் ஒடேசா துறைமுகத்தின் மீது ரஷ்யா 'ட்ரோன்' தாக்குதல் நடத்தியது. இதில் துறைமுகத்தில் மிகப் பெரிய அளவில் தீப்பிடித் ததாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலியின் முதலாவது பெண் பிரதமராக ஜோர்ஜியா மெலோனி அம்மையார் தெரிவு



மிலன், செப்.27

இத்தாலியில் வலது சாரி கட்சியை சேர்ந்த ஜோர்ஜியா மெலோனி தேர்தலில் வெற்றி பெற்று அந்நாட்டின் முதல் பெண் பிரதமராக பதவியேற்க உள்ளார்.


இத்தாலியின் பொருளாதார நிலை மோசமடைந்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்ததை தொடர்ந்து பிரதமர் மரியோ டிராகி பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து அங்கு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்நிலையில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், இதுவரை எண்ணப்பட்ட 63 சதவீத வாக்குகளில் ஜோர்ஜியா மெலோனியின் வலதுசாரி கட்சியான பிரதர்ஸ் ஒவ் இத்தாலி கட்சி 26 சதவீதம் வெற்றி பெற்றுள்ளது.

அதன் கூட்டணி கட்சிகளான, மேத்யூ சால்வினி தலைமையிலான லீக் கட்சி 9 சதவீதம், சில்வியோ பெர்லுஸ்கோனி தலைமையிலான போர்ஜா இத்தாலியா கட்சி 8 சதவீதம் வெற்றி பெற்றுள்ளன. தீவிர வலதுசாரி தலைவரான ஜோர்ஜியா மெலோனியின் கூட்டணி பெரும்பாலான இடங்களை கைப்பற்றி உள்ளதால், அவர் இத்தாலியின் முதல் பெண் பிரதமாக பதவி ஏற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

45 வயதான ஜோர்ஜியா மெலோனி தீவிர தேசியவாதியாகவும், ஐரோப்பிய எதிர்ப்பு ஒற்றுமையை தலைவராகவும் கருதப்படுகிறார். 2008 இல், பெர்லுஸ்கோனி பிரதம மந்திரியாக இருந்த போது மந்திரிசபையில் ஜோர்ஜியா மெலோனியை விளையாட்டுத்துறை மந்திரியாக நியமித்தார். இந்நிலையில் தற்போது பெரும் செல்வாக்குடன் பிரதமர் அவர் உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூமியை தாக்க வாய்ப்புள்ள சிறுகோளை விண்கலத்தால் மோதி திசை திருப்பினர்



பூமியை தாக்க வாய்ப்புள்ள சிறுகோள் மீது விண்கலத்தை வெற்றிகரமாக மோதச்செய்து நாசா சாதனை படைத்துள்ளது. சிறுகோள்கள் அல்லது பிற விண்வெளி கற்கள் போன்றவை பூமியை தாக்க வாய்ப்பு இருக்கிறதா என விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர்.

அந்த வகையில், அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, கிரக பாதுகாப்புக்கான அதன் தற்போதைய பணியை நிர்வகிக்க 'கிரக பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அலுவலகம் (பி.டி.சி.ஓ.)' ஒன்றை நிறுவி உள்ளது.

இந்த அமைப்பு கடந்த சில மாதங்களுக்கு முன் 'டார்ட்' விண்கலம் ஒன்றை விண்வெளிக்கு அனுப்பியது. அந்த விண்கலம் பூமிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என கணிக்கப்பட்ட டிடிமோஸ் பைனரி என்ற சிறுகோளைக் கண்டுபிடித்தது.

இந்த டிடிமோஸ் பைனரி சிறுகோளை பூமி மீது மோதுவதை தடுப்பதற்காக அதை திசை திருப்புவதற்கு நாசா சோதனை அடிப்படையில் முயற்சிகளை மேற்கொண்டது.

அந்த வகையில் நாசாவால் ஏவப்பட்ட அந்த விண்கலம், பூமி மீது மோத வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்ட சிறுகோள் மீது இன்று வெற்றிகரமாக மோதப்பட்டது. இதன் மூலம் அந்த சிறுகோளின் பாதை பூமியில் இருந்து திசை திருப்பப்பட்டுள்ளது.

இதனால், அந்த சிறுகோளால் பூமிக்கும் ஏற்படவிருந்த ஆபத்து முறியடிக் கப்பட்டது. சிறுகோள் மீது விண்கலம் மோதும் வீடியோவை நாசா தனது அதிகாரப்பூர்வ இணை யதளப் பக்கத்தில் நேரலையாக ஒளிபரப்பியது. விண்கலம் வெற்றிகரமாக சிறுகோள் மீது மோதிய நிலையில் அந்த கோளின் பயண திசை விரைவில் மாறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ராகுலின் யாத்திரை காஷ்மீர் செல்ல முன்னர் காங்கிரஸ் கட்சி முக்தி அடைந்து விடுமாம்!

## பாரதிய ஜனதாக் கட்சி அமைச்சர் கிண்டல்



கவுகாத்தி,செப்.27

இந்திய ஒற்றுமை யாத்திரையில் காஷ்மீரை ராகுல் காந்தி சென்று அடைவதற்குள் நாட்டில் இருந்து காங்கிரஸ் முக்தி பெற்று விடும் என பா.ஜ.க. அமைச்சர் கிண்டலாக கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சி யின் இந்திய ஒற்றுமை யாத்திரை ராகுல் காந்தி தலைமையில் நடந்து வருகிறது. பாரத ஒற்றுமை, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தி அகில இந்திய காங்கிரஸ் கட்சி யின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி கடந்த 7 ஆம் திகதி தனது இந்திய ஒற்றுமை பாதயாத்திரையைக் கன்னியாகுமரியில் தொடங்கினார்.

இடையிடையே ஓய்வு ஒடுத்து கொண்டு தனது பாதயாத்திரையை அவர் தொடர்ந்து வருகிறார். இந்நிலையில், அசாமில் தூப்ரி மாவட்டத்தில் ராஜீவ் பவனில் இந்திய ஒற்றுமை யாத்திரை பற்றி நடந்த ஆலோசனை கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் இரு குழுக்கள் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. அசாம் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் சில தலைவர்கள் முன்னிலையிலேயே இந்த மோதல் நடந்தது.

வருகிற நவம்பர் முதலாம் திகதி அசாமில் நடைபெற உள்ள இந்திய ஒற்றுமை யாத்திரை பற்றி ஆலோசிப்பதற்காக நடந்த இந்த கூட்டத்திலேயே மோதல் ஏற்பட்டு உள்ளது.

இதுபற்றி பா.ஜ.க. தலைவர் மற்றும் அசாம் மந்திரியான பிஜூஷ் ஹசாரிகா கூறும்போது - நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கும்போது, காஷ்மீரை ராகுல் காந்தி சென்று அடைவதற்குள் நாட்டில் இருந்து காங்கிரஸ் முக்தி பெற்று விடும் போல் தெரிகிறது என கிண்டலாக கூறியுள்ளார்.

அவர் தனது டுவிட்டரில் இதனுடன், காங்கிரஸ் தொண்டர்களின் மோதல்கள் அடங்கிய செய்திகளையும் பகிர்ந்து உள்ளார். கேரளாவில் நடந்து வரும் இந்த பாதயாத்திரை நாளை மறுதினம் கர்நாடகாவை சென்றடைகிறது.

# இந்திய ரூபாவின் பெறுமதி டொலருக்கு எதிராகச் சரிவு



மும்பை, செப்.27

அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாவின் மதிப்பு கடந்த சில நாள்களாக தொடர்ந்து சரிந்து வருகிறது.

கடைசியாக கடந்த 24 ஆம் திகதி 30 காசுகள் சரிந்து, டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு ரூ.81.09 ஆக இருந்தது. இது நேற்று மீண்டும் 58 காசுகள் வீழ்ச்சியடைந்தது. அதன்படி டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு ரூ.81.67 ஆக சரிந்து உள்ளது. இது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி ஆகும். ரூபாவின் மதிப்பு தொடர்ந்து 4 நாள்களாக வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்த 4 நாள்களில் 193 காசுகள் சரிந்திருப்பதாக நிதி யமைச்சக வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

# ஜப்பான் பிரதமர் - மோடி டோக்கியோவில் சந்திப்பு



ஷின்சோ அபே நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்க ஜப்பான் சென்ற இந்தியப் பிரதமர் மோடி, ஜப்பானியப் பிரதமருடன் சந்திப்பு நடத்தினார்.

டோக்கியோ விமானநிலையத்தில் பிரதமர் மோடியை ஜப்பான் பிரதமர் புமியோ கிஷி வரவேற்றார்.

ஜப்பானில் நீண்டகாலமாக பிரதமராக பதவி வகித்தவர் ஷின்சோ அபே (வயது63). கடந்த ஜூலை மாதம் இவர் தேர்தல் பிரசாரத்தின்போது சுட்டுக் கொல்லப்பட்டார். இதையொட்டி இந்தியாவில் ஒருநாள் துக்கம் அனுசரிக்கபட்டது. அபேயுடன் பிரதமர் மோடி நட்புணர்வை பேணி வந்தார். பிரதமர் மோடி வெளியிட்டு இருந்த இரங்கல் செய்தியில் பாச மிகு நண்பர் என குறிப்பிட்டு இருந்தார்.

இந்தநிலையில் ஷின்சோ அபே நினைவு அஞ்சலி நிகழ்ச்சிக்கு இன்று ஜப்பான் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதை ஏற்று பிரதமர் மோடி ஜப்பான் புறப்பட்டு சென்றார். டோக்கியோ விமானநிலையத்தில் அவரை ஜப்பான் பிரதமர் புமியோ கிஷி வரவேற்றார். பின்னர் இருநாட்டு தலைவர்களும் பேசினார்கள்.

இது தொடர்பாக பிரதமர் மோடி கருத்து வெளியிடுகையில் -

துயரம் நிறைந்த இந்த நேரத்தில் எங்களது இந்தச் சந்திப்பு நடந்தது. கடந்த முறை ஜப்பான் வந்த போது நீண்ட நேரம் அபேயுடன் உரையாடினேன். இந்தியா அவரை இழந்து தவிக்கிறது. அவர் இல்லாததை இந்தியா உணர்கிறது. - இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.



# பள்ளி மாணவர்களுடன் ராகுல் யாத்திரை இடையே கால்பந்து

திருவனந்தபுரம்,செப்.27

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை பயணம் மேற்கொண்டுள்ளார்

அவர் இன்று காலை 6.30 மணிக்கு மலப்புரம் புலமந்தோல் பகுதியில் இருந்து பாதயாத்திரையை தொடங்கினார். பழங்குடி இன மக்களையும் அவர் சந்தித்து பேசினார்.

கன்னியாகுமரியில் கடந்த 7 ஆம் திகதி பாதயாத்திரையை தொடங்கிய ராகுல் காந்தி 11 ஆம் திகதி முதல் கேரள மாநிலத்தில் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். பாலக்காடு மாவட்டத்தில் நேற்று பாதயாத்திரை சென்ற ராகுல் காந்தி வழியில் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளை சந்தித்து பேசினார். மேலும் சாலையின் ஓரம் தன்னை பார்க்க காத்திருந்த பள்ளி மாணவர்களையும் அழைத்து பேசினார். அப்போது சில மாணவர்கள் கால்பந்து விளையாடி கொண்டிருந்தனர். அவர்களையும் அழைத்து பேசிய ராகுல் காந்தி, அந்த மாணவர்களுடன் சிறிது நேரம் கால்பந்து ஆடினார். இதுபோல பழங்குடி இன மக்களையும் சந்தித்து பேசினார். பின்னர் அவர்களின் குறைகளை கேட்டறிந்த ராகுல் காந்தி, அவர்களின் குறைகளை போக்க முயற்சி மேற்கொள்வார் எனவும் தெரிவித்தார்.

ராகுல் காந்தி, இன்று காலை 6.30 மணிக்கு மலப்புரம் புலமந்தோல் பகுதியில் இருந்து பாதயாத்திரையை தொடங்கினார். பகல் 11 மணிக்கு எம்.எஸ்.டி.எம். கல்லூரியில் நிறைவு செய்தார்.

பிற்பகல் அங்கு ஓய்வு எடுத்த பாதயாத்திரை குழுவினர் இன்று மாலை 5 மணிக்கு மீண்டும் அங்கிருந்து புறப்படுகிறார்கள். இரவு 7 மணிக்கு மலப்புரம் தச்சினகாடம் பகுதியில் உள்ள பள்ளியில் நிறைவு செய்கிறார்.

# வலுவான சமூகத்தை மீளக் கட்டியமைக்க பாரம்பரிய உற்பத்தியை ஊக்குவிப்போம்!

## குச்சவெளி கிராமிய கைத்தொழில் சந்தை ஆரம்ப நிகழ்வில் உரை






(பைசல் இஸ்மாயில்)

நவீன உற்பத்திகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு செயற்கைச் சூழலுக்குள் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையால், பாரம்பரிய உற்பத்திகள் மங்கி மறைந்து வருகின்றன என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கிராமிய சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் குச்சவெளி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமியக் கைத்தொழில் பொருள்களின் சந்தையும், கண்காட்சியும் நேற்று குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சந்தையுடனான கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்ததன் பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நவீன அவசர உற்பத்திகளின் ஆக்கிரமிப்பின் விளைவாக உள்ளூர் கிராம உற்பத்திகளுக்கு தேசிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. தற்போதைய நவீன அவசர உலகில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் இயற்கைக்குச் சவால் விடும்படியாகவும், சூழலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிப்பனவாகவும் அமைந்திருக்கின்ற போதும் நம்மில் அநேகம் பேர் அவசரஉலகப்போக்கில்அதனையேவிரும்புகின்றோம்.

நீண்டகாலப் போக்கில் இந்த நவீன உற்பத்திகளால், இயற்கைக்கும் தேக ஆரோக்கியத்திற்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை உணர்ந்த ஒரு சாரார் பாரம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், பாரம்பரிய உணவு உற்பத்தியாளர்களின் உணவு உற்பத்திகளை ஊக்குவிக்க அரசும் இன்னும் சில அரச சார்பற்ற சமூக அமைப்புக்களும் உதவிக் கொண்டிருக்கின்றன. இந்த சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நவீன மாயையிலிருந்து விடுபட்டு எமது பரம்பரியத்திற்குள் மீண்டும் நாம் உள்நுழைவதன் மூலம் நாமும் எமது எதிர்கால சந்ததியும் நீடித்து நிலைக்கக் கூடியதான இயற்கைக்கும், கேடு விளைவிக்காத சிறந்த சூழலுக்கும் மாறிவிட பெரும் வாய்ப்பாகும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களான பெண்களுடைய திறமைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகக் கூட இதனை பார்க்கும்போது இதற்கென ஒரு தேசிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம் கின்றேன். அதன் மூலமாக கை வினைத்திறனி ஈடுபட்டுள்ள இந்தக் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்திலே ஒரு சிறந்த நிலைக்குச் செல்ல முடியும் இதனூடாக தமது உற்பத்திகளை அவர்கள் தேசிய மட்டத்திற்கு எடுத்துச் சென்று பிரபல்யப்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்றார்.

இக்கண்காட்சியில் பாரம்பரிய உணவு வகைகள் நஞ்சற்ற மரக்கறி மற்றும் தானியங்கள், சிற்றுண்டி ற்றும் முறுக்கு வகைகள், உணவு வகைகள், ஆடைகள் பைகள், மட்பாண்டங்கள், பனையோலை உற்பத்தி பொருள்கள், பன்பாய்கள், வீட்டு அலங்காரங்கள் தாவர உற்பத்திகள் மற்றும் இன்னோரன்ன பாரம்பரி உற்பத்திகள் இடம்பிடித்திருந்தன.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை உறுப் னர்கள், பிரதேச சபை செயலாளர் திருமதி மாலின அசோக்குமார், உதவி பிரதேச செயலாளர் திரும பாமா மோகன முரளி மற்றும் தன்னார்வத் தொண்ட நிறுவனப் பிரதிநிதிகளும் இன்னும் கிராமியக் கை தொழில் உற்பத்தியாளர்களும் பொதுமக்களும் கலந்த கொண்டனர்.

# திருக்கோவில் புளியம்பத்தை முன்பள்ளி பாடசாலை திறப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட புளியம்பத்தை மகாசக்தி முன்பள்ளி பாடசாலை திறப்பு விழா நேற்று திங்கட்கிழமை (கலைவாணி கனிஷ்ட வித்தியாலய அதிபர் ஆ.நல்லதம்பி தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் மற்றும் பாடசாலை பெயர் பலகை திரைநீக்கம் இடம் பெற்றது. இணைந்த கரங்கள் அமைப்பு இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பண்ணிப்பாளர் வை. ஜெயசந்திரன் கலந்து கொண்டார். ஆலையடி வேம்பு கோட்டக்கல்வி அதிகாரி கே.கருணாகரன், ஆலையடி வேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், ஆயுள்வேத வைத்திய அதிகாரி பாத்திமா ஆமிலா ஜமால்டீன், கால் நடை வைத்திய அதிகாரி திருமதி.ரி. கோகுலதாஸ், ஆலையடிவேம்பு பிரதேச செயலக முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் பாத்திமா கரீமா, மாதர் சங்க உறுப்பினர்கள், அப்பிரதேச ஆலயத் தலைவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

'இணைந்த கரங்கள்' அமைப்பின் உறுப்பினர்களான எஸ். தினேஸ்ராஜ்,ரி.ஜனபாலசந்திரன் குடும்பத்தினரும்,கனகராஜ் நடராஜமணி குடும்பங்களின் நிதிப்பங்களிப்பில் உதவிகள் வழங்கி இருந்தனர்.

அத்துடன் அதிக கஷ்டப் பிரதேசமான புளியம்பத்தைக் கிராமத்தில் இயங்கி வருகின்ற கலைவாணி வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்ற 15 மாணவர்களுக்கும் மற்றும் அதே கிராமத்தில் 'இணைந்த கரங்கள்' அமைப்பினால் திறந்து வைக்கப்பட்ட மகாசக்தி பாலர் பாடசாலையில் கல்வி பயில இருக்கின்ற 15 மாணவர்களுக்குமென மொத்தமாக 30 மாணவர்களுக்கு பாடசாலை நேரங்களில் சத்துணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை வழங்க இணக்கம் தெரிவித்துள்ள ராஜ் சூப்பர் மார்க்கெட் உரிமையாளரான புவனேஷ்ராஜாவிற்கு அனைவரும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

இப் பாடசாலைக்கு புதுப்பொலிவான பெயர்ப்பலகை செய்து திறந்து வைத்தமை இப் பாடசாலை சமூகத்தினையும் மாணவச் செல்வங்களையும் மகிழ்வுட்டும் நிகழ்வாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கான விளையாட்டு உபகரங்கள் மற்றும் உபகரணங்களை இணைந்த கரங்கள் அமைப்பு வழங்கிவைத்தது.

இணைந்த கரங்கள் இணைப்பாளர்களான லோ. கஜரூபன், மற்றும் எஸ்..காந்தன், கே.வாணன், மற்றும் இணைந்த கரங்கள் ஆதரவாளர்களான எஸ். செல்வநாயகம் ஐயா, ரி.லக்ஷ்மிகாந் ஆகியோரினால் இவை வழங்கி வைக்கப்பட்டன.

இணைந்த கரங்கள் அமைப்பினால் ஒதுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஒரு மாத கொடுப்பனவு முன்பள்ளி ஆசியரிடம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இறக்காமம் பிரதேச செயலகத்தில் நேற்று விழிப்புணர்வுச் செயலமர்வ

(நூருள் ஹுதா உமர்)

ஊட்டச்சத்து குறைபாடுள்ள சிறார்கள் கல்வி கற்கும்சிறுவர்நேயபாடசாலைகளில்போசாக்கான உணவுகளை வழங்குவதோடு, தோட்டம் பயிரிடுதல், பயன்தரும் மரக்கன்றுகளை நடுதல் என்பன பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு பயிர்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் நேற்று திங்கள் கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, வளவாளர்களாக ஆயுர்வே சமுதாய வைத்திய அதிகாரி கே.எல். நக்பர், ம திய மற்றும் மாகாண அரசுகளின் விவசாய விரிவாக்கல் மத்திய நிலையப் பொறுப்ப காரிகளான எஸ்.ஏ.எல் அஸ்வர், எஸ்.ஏ.எல். பஹ் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் பிரதேச செயலக விவசாய அபிவிருத் உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் மற்று சிறுவர் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கட்சியின் தவறுகளை நிவர்த்திசெய்து பெரமுன மீண்டும் கட்டியெழுப்பப்படும்!

## நாமல் திடசங்கற்பம்



எமது அரசாங்கத்தில் பல சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் மக்களுக்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள் தவறானவை என நாடாளுமன்றஉறுப்பினர்நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மக்களைச் சிந் தித்து எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் தவறானவை எனவும், அந்தத் தவறு களை நிவர்த்தி செய்து மீண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, எமது அரசாங்கத்தில் பல சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 350 ரூபாவுக்கு மக்களுக்கு உரம் வழங்கினார். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ, உர இறக்குமதியை நிறுத்தி இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்த தீர்மானித்தார் எனவும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.



# சிறுநீரக நோயாளிகளைப் பரிசோதிப்பதற்கு சீனாவில் இருந்து எட்டு பஸ்கள் வழங்கல்!

சிறுநீரக நோயாளர்களைப் பரிசோதிப்பதற்காக நவீன தொழில்நுட்ப ஆய்வு கூடம் பொருத்தப்பட்ட எட்டு பஸ்களை இலங்கைக்கு சீனா வழங்கியுள்ளது. 66 கோடி ரூபா பெருமதியான இந்தப் பஸ்கள் இலங்கையில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

அதன்படி, அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, குருநாகல், மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

# தீ விபத்தால் வீடுகளை இழந்தவர்கள் வீடுகளை அமைத்துத்தர கோரிக்கை!

தலவாக்கலை – ஹொலிறூட் ஈஸ்ட் பிரிவு தோட்டத்தில் உள்ள லயக்குடியிருப்பில் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 24 வீடுகளைக் கொண்ட லயக் குடியிருப்பு முற்றாக எரிந்து தீக்கிரையானது. இதனால் 24 குடும்பங்களை சேர்ந்த 200 இறகும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகினர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் தோட்டத்தில் உள்ள பொது கலாசார மண்டபத்தில் எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில், தொடர்ந்தும் மூன்று வருடங்களாக அந்தக் கலாசார மண்டபத்தில் பல்வேறு அசௌகரிங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான புதிய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல், 2021ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டப்பட்டு பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வீடமைப்பு பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அதன் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் பொது கலாசார மண்டபத்தில், சேலைகள், பெட்சீட்டுகளால் மறைத்து, பலர் வாழத் தொடங்கியுள்ளனர்.

எனவே, உடனடியாக தமது வீடுகளை முழுமைப்படுத்தி தருமாறு, பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தனியார் வங்கியில் கொள்ளை இருவர் ஆயுதங்களுடன் கைது!

தனியார் வங்கியொன்றில் 50 லட்சம் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள வங்கியில் இடம்பெற்ற இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக துப்பாக்கியுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சுமார் 2 ஆயிரம் பேக்கரிகள் நாடு முழுவதும் மூடப்படல்!

மா மற்றும் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் சுமார் 2 ஆயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

பேக்கரி தொழிலுக்கு தேவையான பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பேக்கரிகளும் மூடப்பட்டுள்ளன என அதன் தலைவர் கூறினார். இதன் காரணமாக இந்தத் தொழிலை நம்பியுள்ள சுமார் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விபத்துக்குள்ளான பொலிஸ் 3 மாதங்களின் பின் சாவு!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மூன்று மாத காலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியை சேர்ந்த கோணேஸ்வரன்ஹரிபிரணவன் என்ற 29 வயதுடைய பொலிஸ் உத்தியோகஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் வேலையை முடித்துக் கொண்டு வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது விபத்துக்கு உள்ளானார். விபத்துக்கு உள்ளானவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு இருந்த நிலையில், கடந்த மூன்று மாத கால பகுதியாக சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தகவல் அறியும் உரிமை குறித்து கந்தளாயில் நேற்று செயலமர்வு

(எவ்.முபாரக்)

சர்வதேச தகவல் அறியும் உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தினால் நேற்று கந்தளாய் ஆயிா பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளை அடிப்படையாகக் கொண்டு 'தகவல் அறியும் உரிமை மற்றும் தகவல் கோரல்' என்ற தலைப்பில் ஒரு நாள் விழிப்புணர்வுச் செயலமர்வு நடைபெற்றது.

இதற்கான வளவாளராக திருகோணமலை மாவட்ட அலுவலக ஊடகப் பிரிவின் செய்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.எம்.ரஷீன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஊடகஜ் கல்வி ஆசிரியருமான ஒ. கியாஸ் ஈபி ஆகியோர் பங்குபற்றினர்.

ஆரம்ப நிகழ்வில் அதிபர் எஸ்.சாஹிதீன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் தாரிக் மௌலவி, கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் அமைப்பாளர் ஓ.கியாஸ் சபி, மகளிர் நலன்புரி அமைப்பின் தலைவி செய்னுலாப்தீன் நலீமா ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ஜே.எம்.அசார், கங்கதலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் தலைவர்




அமதோர அமரஜீவ, செயலாளர் மனுசங்க காரியவசம், பொருளாளர் பாருக் முபாரக், பிரதி செயலாளர் எம்.எச்.யூசுப், நிர்வாக உறுப்பினர் துார சந்தன சேனாரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தகவல் அறியும் உரிமை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய புத்தகங்களை வழங்கி மாற்றுக் கொள்கை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் திரு. அரண ரூபசிங்க, லயனல் குரேஜ், ஆய்வாளர் லஹிர கிடலாகம, லேக் ஹவுஸ் போக்குவரத்து முகாமையாளர் ஆகியோர் உதவியிருந்தார்கள்.

செயலமர்வு முடிவில் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.09.2022இல் வெளியிடப்பெற்றது.